# வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூலை - 2017
# Term Examination, July - 2017

FWC

| தரம் :- 12 (2018) | புள்ளித்திட்டம் | தமிழ் - I |
|---|---|---|

(1) அ. தோழி, மதநீரால் நனைந்த கன்னங்களை உடைய தலைமை வகிக்கும் யானையினது அழகிய முகத்தின் மீது வலிமை மிகுந்த பிளந்த வாயையுடைய பெரிய ஆண்புலி பாய்ந்து, அவ்யானையின் வெள்ளைக் கொம்பைத் தனது இரத்தத்தால் கறை படச் செய்து, பிளந்த, குகையின் பக்கத்திலே காற்று வீழ்த்திய கரிய அடியையுடைய வேங்கை மரத்தின் வாடிய பூங்கொம்பினைப் போல, இறந்து கிடக்கும் உயர்ந்த மலையினையுடைய நாட்டின் தலைவனுடன் செல்வது பற்றி நீ நினைத்துப் பார்ப்பாயாக.

(04 புள்ளிகள்)

ஆ) தலைவனது வலிமையை நம்பி அவனோடு உடன் போகலாம் என்ற நம்பிக்கையை தலைவிற்கு ஏற்படுத்தப் பொருத்தமான உள்ளுறை உவமம் கையாளப்பட்டுள்ளது. எதிர்த்து வந்த புலியைக் கொன்றொழித்த யானை போல வழியில் எதிர்ப்படும் துன்பங்களை எதிர்கொண்டு நிற்கக் கூடிய ஆற்றல் மிக்க உயர்ந்த மலை நாட்டையுடையவன் உன்னைக் காப்பற்றுவான். எனவே நீ பயமின்றி அவனுடன் செல்லலாம் என்பது இங்கு மறைமுகமாக உணர்த்தப்படுகின்றது.

(03 புள்ளிகள்)

இ) காதல் உணர்ச்சியை வெளிப்படுத்துதல்

தவைன், தலைவி பெயர் சுட்டாமை.

கருத்தை பாத்திரக்கூற்று வாயிலாக வெளிப்படுத்துதல்.

திணைக்குரிய கருப்பொருள்களைக் கையாளல்.

உள்ளுறை உவமம் கையாளப்பட்டிருத்தல். (03 புள்ளிகள்)

(2) அ) வானதூதன் தெரிவித்த கடடளையைச் சூசை தன் மனைவி மரியாளிடம் தெரிவித்த போது மரியாள் அடைந்த துன்பத்தை இப்பாடல் சித்தரிக்கின்றது. (03 புள்ளிகள்)

ஆ) சூசை கூறிய வார்த்தைகள் அழகுமிகுந்த மரியாளுக்குப் பெருந்துன்பத்தை விளைவித்தன என்பதை விளக்குவதற்குப் பொருத்தமான உவமையணி கையாளப்பட்டுள்ளது.

உவமானம் - தீயின் முன்னே இடப்பட்ட மெல்லிய இதழ்களிடையே இருக்கும் பூந்தாது.

உவமேயம் - சூசை கூறிய வார்த்தைகளைக் கேட்டுத் துடித்த மரியாள்

பொதுத்தன்மை – கருகி வாடுதல் (04 புள்ளிகள்)

இ) „செய்யிதட் டாமரை பழித்த சீறடித் துய்யிதட் டுப்பவிழ் சுருதி வாயினாள்'' என்ற அடிகள் மரியாளின் சிறப்பினைக் கூறி நிற்கின்றன. செந்நிற இதழ்களைக் கொண்ட தாமரை மலரைப் பழித்த சிறிய பாதங்களையும் பவளம் போல விரிகின்ற தூய உதடுகளையும் வேதங்களை ஓதுகின்ற வாயையும் கொண்டவளாக மரியாள் சிறப்பிக்கப்படுகின்றாள்

(03 புள்ளிகள்)

02. அ) 1. 3 2. 3 3. 2 4. 3 5. 3

6. 2 7. 3 8. 3 9. 5 10. 5 (10x1=10 புள்ளிகள்)

ஆ) 1. செய்வினை வாக்கியத்தின் செயப்படுபொருளை எழுவாயாக் கொள்ளும் வினை செயப்பாட்டு வினை எனப்படும்.

உதாரணம்:- வானதியால் வர்ணம் தீட்டப்பட்டது.

2. சொல்லின் முதலிலோ, இடையிலோ, ஈற்றிலோ வரும் ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரையிலிருந்து ஒரு மாத்திரையாகக் குறைந்தது ஒலிப்பது ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

உதாரணம்:- ஐயர், கலைஞர், பனை

3. பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்பன ஒட்டியும் பண்புருபு மறைந்தும் வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகும்.

உதாரணம்:- புலவர் இளங்கோ, கதலி வாழை

4. நட்டான், புக்கான்

| | |
|---|---|
| நடு + ஆன் | புகு + ஆன் |
| நட்டு + ஆன் | புக்கு + ஆன் |
| நட்டான் | புக்கான் |

இங்கு நடு, புகு என்றும் பகுதிகள் நட்டு, புக்கு என இரட்டித்து இறந்த காலத்தைக் காட்டுகின்றன.

5. சொற்களிடையே இரு மெய்யெழுத்துக்கள் அடுத்தடுத்து வருவது இடைநிலை மெய்ம்மயக்கம் எனப்படும். இது இருவகைப்படும்

1. உடனிலை மெய்ம்மயக்கம் - சொற்களிடையே ஒரே மெய் எழுத்து இரட்டித்து வருவது உடனிலை மெயம்மயக்கம் எனப்படும்.

உதாரணம்- பக்கம்(க்+க்), வெற்றி (ற்+ற்)

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம் - சொற்களிடையே ஒரு மெய் வேறு மெய்யுடன் இணைந்து வருவது வேற்றுநிலை மெய்ம்மயக்கம் எனப்படும்.

உதாரணம் - அன்பு (ன்+ப்) சங்கு(ங்+க்)

(5x2=10 புள்ளிகள்)

3. கட்டுரை – பொருட்பொருத்தம் - 10 புள்ளிகள்

மொழிச்செம்மை – 05 புள்ளிகள்

பந்தி, குறியீடு, நேர்த்தி – 03 புள்ளிகள்

முழுமை – 02 புள்ளிகள்

மொத்தம் - 20 புள்ளிகள்

## பகுதி – II – அ

4. அ) அமைச்சருக்கு இன்றியமையாதவை

- நா நலம் என்னும்…..
  அமைச்சருக்கு மிகச்சிறந்த குணமாவது நாவின் நலமுடையவராக இருத்தலாகும். அந்நலம் பிற எல்லா நலத்தினையும் விட மேலானதாகும்.
- ஆக்கமுங் கேடும் ………..
  தம் அரசனுக்கு செல்வப்பெருக்கமும் அழிவும் தமது சொல்லால் வரும் ஆகையால் சொற்களில் சோர்வில்லாமல் போற்றிக் காத்தல் வேண்டும்.

06 புள்ளிகள்

ஆ) சொல்லினது இலக்கணம்

- கேட்டார்ப் பிணிக்கும்............
கேட்பவர்கள் தொடர்ந்தும் கேட்கும் படியாகவும் கேளாதவர் தம் பகைமையை மறந்து விரும்பிக் கேட்கும் படியாகவும் சொல்லப்படுவதே சொல் ஆகும்.

02 புள்ளிகள்

இ) சொல்வல்லரது இயல்பு

- சொல்வல்லன் சோர்விலன்..........
தான் நினைத்தவற்றைப் பிறக்குத் தெளிவாகச் சொல்பவனாகவும், அவ்வாறு சொல்லும் போது தவறுகளேதுமின்றிச் சொல்பவனாகவும், சபைக்கு அஞ்சாமல் சொல்பவனாகவும் இருப்பவனைப் பகைமையால் வெல்லுதல் யார்க்கும் அரிதாகும்.

- விரைந்து தொழில் ..................
சொல்ல வேண்டியவற்றை ஒழுங்காகவும் முறையாகவும் இனிதாகவும் சொல்லுகின்ற ஆற்றல் உள்ளவரைப் பெற்றுவிட்டால் உலகம் அவற்றை விரைந்து ஏற்றுக் கொள்ளும்.

06 புள்ளிகள்

ஈ) சொல்லாற்றல் அற்றாரத இழிவு

- பல சொல்லக் காமுறுவர்...........
குற்றமற்ற சில வார்த்தைகளைச் சுருக்கமாகச் சொல்லத் தெரியாதவர்கள் பல வார்த்தைகளைப் பேச விரும்புவார்கள்.

- இணரூழத்தும் ...................
தாம் கற்ற விடயங்களைப் பிறருக்கு விளங்கும் வண்ணம் தெளிவாகக் கூற முடியாதவர்கள், கொத்தாக மலர்ந்திருக்கும் மணம்வீசாத மலருக்கு ஒப்பாவார்.

06 புள்ளிகள்

05. அ) தசரதன் நிலை

- தனுக்கம் எய்தா, ஆகம் அடங்கலும் வெந்து அழிந்து, அராவின் வேகம் அடங்கிய வேழம் என்ன வீழ்ந்தான்.
- பூதலமுற்று அதனில் புரண்டான். வேதனை முற்றிட வெந்த வெந்து, கொல்லன் உலையில் ஊது கனல் என்ன, வெய்து உயிர்த்தான்.
- ஐம்புலன்களும் கலங்கின
- வெந்த கொடும்புணில் வேல் நுழைந்தது ஒப்ப சிந்தை திரிந்து, திகைத்து, அயர்ந்து வீழ்ந்தான்.
- ''நாரிய ரில்லையிஞ் ஞாலமேழும் என்னக் கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யேனும் பூரிய ரெண்ணிடை வீழ்வன்''. என்றான்.
- கையொடு கையைப் புடைக்கும், வாய் கடிக்கும் மெய்யுரை குற்றம் எனப் புழுங்கி விம்மும் எரியுற்று நெய்யென நெஞ்சு அழிந்து சோரும்.

07 புள்ளிகள்

ஆ) கைகேயி நிலை

- தீயவை யாவையினும் சிறந்த தீயாள்
- நாக மெனுங் கொடியாள்
- அம்பன கண்ணவ ளுள்ள மன்னதே
- அஞ்சள், ஐயனது அல்லல் கண்டும் உள்ளம் நஞ்சிலள், நாண் இலள்.
- மனம் மாறியதற்கான காரணத்தைத் தசரதன் கேட்டபோது, „வரத்தைத் தராவிட்டால், வசைத்திறம் நின் வயின் வைத்து மாள்வென்,' என்றாள்
- மன்னர்க்கும் மன்னாகிய தசரதன் காலில் லிழுந்த வணங்கிக் கேட்கவும் சற்றும் மனமிளகாது நின்ற கைகேயியின் வன்மம்.

06 புள்ளிகள்

இ) தசரதன் பற்றியவை

- அராவின் வேகம் அடங்கிய வேழம் என வீழ்ந்தான்.
- கொல்லன் ஊதுலையிற் கனலென்ன வெய்துயிர்த்தான்.
- ஓவிய மொப்பு உயிர்ப்படங்க ஓய்ந்தான்
- வெம்புண் நுழைகிற்க உழைக்கும் ஆளை போல்வான்.
- கம்பநெடுங் களியானை அன்ன மன்னன்
- வெந்த கொடும்புணில் வேல் நுழைந்தது ஒப்ப, சிந்தை திரிந்து, திகைத்து, அயர்ந்து வீழ்ந்தான்.
- நெய்யெரியுற்று என நெஞ்சழிந்து சோர்ந்தாள்

கைகேயி பற்றியவை.

- நாக மெனுங் கொடியார்
- அம்பென கண்ணவள் 07 புள்ளிகள்

06. அ) கண்ணனின் குறும்புகள்

- வெண்ணெய் அளைந்த மேனியோடு புழுதியில் விளையாடுதல்
- கன்றுகள் சிதறி ஓடும்படியாக அவற்றின் காதில் கட்டெறும்பு பிடித்து விடுதல்.
- எண்ணெய்க் குடத்தை உருட்டுதல்
- துயிலும் குழந்தையைக் கிள்ளி எழுப்புதல்.
- கண்ணைப் புரட்டி விழித்தல்.
- பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றைத் திருடி உண்ணுதல்.
- கன்றின் வாலில் ஓலை கட்டி விடுதல்.
- கனிகள் உதிரும்படி எறிதல்.

செயற்கரிய செயல்கள்

- மராமரம் சாய்த்தமை
- பேய்ச்சி முலையுண்டுஅவளைக் கொன்றமை.
- தன்னைக் கொல்வதற்காக கம்சனால் ஏவப்பட்ட சகடத்தை உதைத்தமை.
- மலைப்பாம்பு உருக கொண்டு வந்த பகாசுரனைத் துரத்திச் சென்று பிடித்து ஆட்டிக் கொன்றமை. 10 புள்ளிகள்

ஆ) கைகேயியைக் கண்டவுடன் ஓடோடிச் சென்று சர்வாங்குமும் தரையிலே படவிழுந்து விழுந்து வணங்குதல்.

- தன்னந்தனியாக, பரிசனமும் பரிவாரமும் இல்லாத துறவி போன்ற படர்வதற்குக் கொழுகொம்பின்றித் தவிக்கும் கைகேயியின் நிலையை உணர்ந்து கொள்ளுதல்.
- பரதனின் வைராக்கியம் பற்றி இருவரும் உரையாடுதல்.
- எரிந்து மிஞ்சிய சாம்பலை அகற்ற இராமன் விரைவில் வந்து விடுவானென அகலிகை, கைகேயிக்கு ஆறுதல் கூறுதல். 10 புள்ளிகள்

இ) வேற்றுக் கிரக மனிதர் பூமிக்கு வந்தமை. சாத்தியமானது என்பதற்கான சான்றுகள்

- புதைபொருட்கள், இலக்கியங்களில் இருந்து பெறும் சான்றுகள்.
- கல்வெட்டுக்கள்
- ஓவியங்கள் சிலைகள்
- விண்வெளி வீரர்களின் உடைகள்
- பண்டைய இந்திய இலக்கியங்கள் கூறும் போர்களில் இடம்பெற்ற போர்க்கருவிகள், வேறு கோள்களில் இருந்து வந்த அறிவு படைத்த உயிரினங்கள். 10 புள்ளிகள்

ஈ) சூசை அடைந்த துன்பம்

- நெருப்பிலே மூழ்கிய பசுமையான பூந்தாதோ கண்ணிற் பாய்ந்த வேல் தானோ அகன்ற புண்ணின் துவாரத்தின் நுழைந்த செந்நெருப்போ இடியோ, உயிர் பறிக்கும் இயமனோ நெடிய கடல் நீரில் உண்டான சுழியில் அகப்பட்டு மூழ்கிய தனிமை போன்றதுவே. என்றெல்லாம் சொல்லும் படியாக வருந்தினாள்.

- மகனையும் மனைவியையும் எகிப்து நாட்டின் தொலைவையும் ஆராய்ந்து பார்த்து புலியின் நிழற்றப்பட்ட மான் போல ஏங்கித் துயருற்றான்.
- அறிமுகமானவா், உறவினா் இல்லாமையாலும், வழித்துணையின்மையாலும் பொன் இல்லாமையாலும் ஏற்பட்ட துன்பங்களால் வருந்தினான்.

மரியாள் அடைந்த துன்பம்

- தீயின் முன் இடப்பட்ட மெல்லிதழ்களிடையே இருக்கும் பூந்தாது போல நொந்து வாடினாள். 10 புள்ளிகள்

## பகுதி – II ஆ

7. அ)

| அறநூல்கள் | அகநூல்கள் | புறநூல்கள் |
|---|---|---|
| திருக்குறள்<br>நாலடியாா்<br>நான்மணிக்கடிகை<br>இன்னாநாற்பது<br>இனியவை நாற்பது<br>திரிகடுகம்<br>ஆசாரக்கோவை<br>பழமொழி நானூறு<br>சிறுபஞ்ச மூலம்<br>முதுமொழிக் காஞ்சி<br>ஏலாதி | காா்நாற்பது<br>ஐந்திணை ஐம்பது<br>ஐந்திணை எழுபது<br>திணைமொழிஐம்பது<br>திணைமாலை நூற்றைம்பது<br>கைந்நிலை | களவழி நாற்பது |

07 புள்ளிகள்

ஆ) அறம், நீதி, ஆசாரம், ஒழுக்கம் பற்றிய போதனைகளே பிரதான பாடுபொருளாக அமைந்தமை.

- அகப்பொருள் மரபு, புறப்பொருள் மரபு
- பக்தி இலக்கியத் தோற்றம்
- சமயப் பிரசார ஊடகம் (மணிமேகலை)
- இறைவனுக்கு அகவுருத் தோற்றம் கொடுத்தமை.
- வடமொழிப் புராண, இதிகாசக் கதைகள் கையாளப்பட்டமை.
- தொடா்நிலைச் செய்யுள்
- பதிக வடிவத் தோற்றம்
- காவியங்களின் தோற்றம்
- அந்தாதி வடிவம் கையாளப்பட்டமை.
- வெண்பா, விருத்தப்பாவின் கையாளுகை. 08 புள்ளிகள்

இ) முதல் தமிழ் காவியம் பாடியமை.

- பொதுமக்களைக் கதை மாந்தா்களாக்கியமை.
- உரைநடையையும் செய்யுள் நடையையும் இணைத்து இலக்கியம் படைத்தமை.
- வடமொழிக் கலப்பற்ற முழுமையான தமிழ்க் காவியம் படைத்தமை.
- கலை நுட்பங்களையும் கலாசார விடங்களையும் இலக்கியத்தினுள் புகுத்தியமை.

05 புள்ளிகள்

8. அ) காவியம் - திருச்செல்வா் காவியம்

புராணம் - சிவராத்திரி புராணம், ஏகாதசி புராணம், பிள்ளையாா் கதை

அம்மானை – அா்ச். யாகப்பா் அம்மானை, திருச்செல்வா் அம்மானை

பள்ளு – ஞானப்பள்ளு, பறாளாய் விநாயகா் பள்ளு, தண்டிகைக் கனகராயன் பள்ளு

தூது – கண்ணியவளை குருநாத சுவாமி தூது, கிள்ளை விடு தூது, பஞ்சவன்னத் தூது

காதல் - எவருவல் சித்திர வேலாயுதா் காதல்

அந்தாதி – கல்வளை அந்தாதி, மறைசையந்தாதி, புலியூரந்தாதி

அகப்பொருட்கோவை – கரவை வேலன் கோவை

பதிகம் - இணுவில் சிவகாமியம்மைப் பதிகம்

ஊஞ்சல் - வட்டுக்கோட்டை பிட்டியம்பதி பத்திரகாளி ஊஞ்சல்

துதி - இணுவில் சிவகாமியம்மை துதி

பிள்ளைத் தமிழ் - இணுவில் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழ்

நாடகம் - அலங்கார ரூபன், அதிரூபாவதி, வாளபிமன், அனுருத்தன்.

விளக்கநூல் - காசியாத்திரை விளக்கம்

அறிவியல் நூல் - அமுதாகரம் (வைத்தியம்), சந்தான தீபிகை (சோதிடம்)

12 புள்ளிகள்

ஆ) கத்தோலிக்க மதப்பிரசார ஊடகங்களாக அமைந்தமை.

- பிராந்திய உணர்வலைகளுக்கு வடிகாலாக யாழ்ப்பாணப் பிராந்தியத்திலுள்ள கத்தோலிக்கத் தேவாலயங்களை முதன்மைப் படுத்தியமை.
- கத்தோலிக்கப் புனிதத் தலங்கள் பற்றிய வருணனை உதாரணம் - ஜெருசலேம், ரோமாபுரி
- பல்துறை சார்ந்த இலக்கியங்கள், பல்வகைச் சிற்றிலக்கியங்கள் கத்தோலிக்க மதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டெழுந்தமை.

08 புள்ளிகள்

The National e-learning Portal for The General Education